செ.வெ.எண்: 01/ஜூலை நாள் : 01.07.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமேஸ்வரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (01.07.2016) நடைபெற்ற பள்ளியின் வைரவிழா ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று கலந்து கொண்டு அதன்பின்பு இராமேஸ்வரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று பள்ளியின் வைரவிழா ஆண்டு நிறைவுவிழா, விளையாட்டு விழா, முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திக்கும் விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அரசு மேல்நிலைப்பள்ளியின் வைரவிழாஆண்டு நிறைவு விழாவில் தலைமையேற்று கலந்து கொண்டு மாணவ,மாணவியர்களிடத்தில் உரையாற்றி பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். அதன்பின்பு இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைத்திட ஏதுவாகவும், கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையிலும் புதிதாக சாலை வசதி ஏற்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும் இராமேஸ்வரத்தில் உள்ள மகாவீர் தர்மசாலா அருங்காட்சியகத்தில் மாவட்ட ஆட்சியரின் மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை ஆய்வு செய்து தொடர்ந்து தங்கச்சிமடத்தில் உள்ள மங்களதீர்த்தம் குளத்திற்கு நேரடியாக சென்று யாத்திரிகர்கள் தங்கி இளைப்பாறும் வகையில் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம் ஆகிய ஊர்களில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து ஆசிரியர்களின் அணுகுமுறைகள் குறித்து மாணவ, மாணவியர்களிடத்தில் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது இராஸேஸ்வரம் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.ஜே.சி.செல்வராஜ்,மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜெயக்கண்ணு, மண்டபம் வட்டாரவளர்ச்சி அலுவலர் திருமதி.காந்தி , விவேகானந்தா கேந்திரிய ஒருங்கிணைப்பாளர் திருமதி.சரஸ்வதி ஆகியோர் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**